யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்

திக்கம் அல்வாய்.

# வருடாந்த பரிசளிப்பு விழா -2017

காலம் - 10.12.2017 ஞாயிற்றுக்கிழமை

நேரம் - மு.ப.9.00 மணி

இடம் - பாடசாலை வளாகம்

தலைவர்

**திரு.கந்தசாமி ரவீந்திரன்**

(அதிபர்)

பிரதம விருந்தினர்

**திரு.கணேஸ் வேலாயுதம்**

(நிறுவுனர் - சிவன் பவுண்டேசன்)

சிறப்பு விருந்தினர்

**திரு.ஜோ.அ.சாள்ஸ் லாசரஸ்**

(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் - மும்மொழி

வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்வுகளின் வரிசையில் ........

1. விருந்தினரை வரவேற்றல்
2. கொடியேற்றல்
3. தேசியகீதம் இசைத்தல்
4. மங்களவிளக்கேற்றல்
5. இறைவணக்கம்
6. தமிழ்மொழி வாழ்த்து
7. வரவேற்புரை
8. வருடாந்த அறிக்கை
9. தலைமையுரை
10. சிறப்பு விருந்தினர் உரை
11. பிரதம விருந்தினர் உரை
12. பரிசில் வழங்கல்
13. கலை நிகழ்வுகள்
14. நன்றியுரை
15. பாடசாலைக்கீதம்

# யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்

## திக்கம் அல்வாய்.

## வருடாந்த பரிசளிப்பு விழா

## -2017-

## வருடாந்த அறிக்கை

# மகுட வாசகம்

## கல்வி அழகே அழகு

### தூரநோக்கு

ஆரம்பக் கல்விப் பருவத்தில் அடைய வேண்டிய தகைமைத்திறன்களை விசேட நிலையில் பெற்று எல்லா மாணவரும் பண்புசார் கல்வியை அடைதல்.

### நோக்கக்கூற்று

எமக்குக் கிடைக்கக்கூடிய தரமான வளங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து தகைமைத்திறனை விருத்தி செய்யும் மாணவர்களை மையப்படுத்திய கல்விச் செயற்பாடுகள் மூலம் சகல மாணவரும் பண்புசார் கல்வியைப் பெற்றுக்கொள்ளச் செய்தல்.

# யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்

## திக்கம், அல்வாய்.

# வருடாந்த அறிக்கை -2017

வடமராட்சிக் கல்வி வலயத்தில் சிறந்த ஆரம்பக்கல்வியை வழங்கி வருகின்ற எமது பாடசாலை வருடாந்தம் மாணவரது கல்விச் செயற்பாடு மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாணவர்களின் ஊக்கத்தை அதிகரிக்கும் முகமாக அவர்களுக்கு பரிசில்களை வழங்கி ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருகின்றது. அந்த வகையில் இன்றைய தினம் இப்பரிசளிப்பு விழாவினை நடாத்தி மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி உற்சாகப்படுத்தும் இந் நிகழ்விற்குரிய நிதியினை அமரர் இராமலிங்கம் துரைராசா வயிராத்தைப்பிள்ளை ஞாபகார்த்த நிதியத்தின் அனுசரணையுடன் நடாத்திக் கொண்டிருக்கின்றோம். இந்நிதியத்தினைச் செயற்படுத்திக் கொண்டிருக்கும் திருமதி ஸ்ரீ.சிவராசா அவர்கள் இவ்வருடம் மேலும் 100, 000/= நிதியினை வைப்பிட்டு நிதியத்தின் மொத்தத் தொகையாக 500, 000/= ஆக உயர்த்தியுள்ளனர். எனவே முதற்கண் இந்நிதியத்தினருக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அடுத்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக தொழிலதிபர் திரு. ந. பாஸ்கரன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்திராணி பாஸ்கரன் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் வருடாந்தம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களுக்கு பரிசுத் தொகையினை வழங்கி வருகின்றது. மேலும் இப்பாடசாலையில் கல்வி கற்கும் வறிய மாணவர்கள் 12 பேருக்கு மாதாந்தம் தலா 100/= வீதம் வங்கியில் வைப்பு செய்யப்படுகிறது. இவ் இரு நிதிகளையும் வழங்கிக் கொண்டிருக்கும் தொழிலதிபர் திரு.ந.பாஸ்கரன் ஐயா அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடுத்து 2016ம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இரு மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டியினை வழங்கிய கௌரவ திரு.சி.அகிலதாஸ்(வடக்கு மாகாணசபை உறுப்பினர்) அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி மிகச் சிறப்பாக திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் அமரர் இராமலிங்கம் சச்சிதானந்தம் பார்வதிப்பிள்ளை ஞாபகார்த்த நிதியத்தின் அனுசரணையில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் திரு.கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகவும் வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலேசகர் திரு.ரவீந்திரன் யசோதரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றியீட்டிய வெற்றி வீராங்கனைகளுக்கான பதக்கங்களை எமது பாடசாலையின் பழைய மாணவனும் வடமராட்சி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகருமான திரு.இ.இராஜசீலன் அவர்கள் தனது தந்தையின் ஞாபகார்த்தமாக வழங்கி சிறப்பித்திருந்தார். அவருக்கும் எமது பாடசாலை சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளுக்காக வறிய மாணவர்களின் கல்விக்கு உதவும் வகையில் இருபத்தைந்து மாணவர்களுக்கு தவணைக்கு 200 ரூபாய் வீதம் கொடுப்பனவு ஒன்றைச் செய்து வருகின்றது லாவண்யா நிதியம் . இந்நிதியத்திற்காக நிதி வழங்கும் திரு ந.விஜயசிங்கம் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதே போல் மாணவர்களுக்கான குடிநீர் விநியோகத்தை மேற் கொள்ளும் திரு யோ.குகானந்தன் அவர்களுக்கும் இந்நிதியைப் பெற்று நீர் விநியோகத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் அவரது சகோதரி திருமதி சதாகரன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடுத்து பாடசாலைச் சுத்திகரிப்பு வேலைகளுக்காக கூலியாளுக்கான கொடுப்பனவை வழங்கிக் கொண்டிருக்கும் திரு.திருமதி த. விஜயகுமார் பிறேமினி (த.விதுசா தரம் 04, த.சதீஸ்குமார் தரம் 01)அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலையின் கற்றல் கற்பித்தல் அபிவிருத்தியில் கிறிஸ்தவம் (றோ.க) பாடத்தை கற்பிப்பதற்கு உதவி புரியும் கிறிஸ்தவ சமய பெற்றோருக்கும், ELRTC ஆங்கில வகுப்பை நடாத்துவதற்கு உதவிபுரியும் ELRTC மாணவர்களது பெற்றோருக்கும், பாடசாலையின் உணவு வழங்கல் செயற்பாட்டிற்கு உதவி புரியும் உலக உணவுத் திட்டத்தினருக்கும் (WFP) மற்றும் இலங்கை அரசினருக்கும் உணவுத் திட்டத்தை மேன்மேலும் சிறப்பாகச் செயற்படுத்துவதற்கு உதவி புரியும் "ஒரு பானை" நிறுவனத்தினருக்கும் பாடசாலையின் சகல செயற்பாடுகளுக்கும் உதவியளித்துக் கொண்டிருக்கும் பழைய மாணவர் சங்கத்தினருக்கும்

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின்ருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைக்குத் தேவையான காணியினைக் கொள்வனவு செய்யும் முகமாக பழைய மாணவர்கள் பலரிடம் நிதி கோரியிருந்தோம் அவவேளையில் அவுஸ்ரேலியாவிலிருந்து வருகைதந்திருந்த திருமதி.சத்தியதேவி பாலகெங்காதரன் அவர்கள் உடனடியாகவே 100,000/= நிதியினை பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். எனவே அவருக்கும் இவ்வேளை எமது பாடசாலை சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆங்கில அபிநயப்பாடல் மாவட்டமட்டப் போட்டிக்கு சென்ற மாணவர்களுக்கான சிற்றுண்டிச் செலவினைத்(3000/=) தந்துதவிய மற்றும் நவராத்திரி தினப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசினை வாங்குவதற்கு நிதியினைத் தந்துதவிய(5000/=) வி.ராஜ்குமார் (ரா.ரதுமினா – தரம்-03) அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலய மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கான ஆங்கில அபிநயப்பாடலுக்கான ஓகன் இசையுடன் பயிற்சியை அளித்த திரு.சி.அன்ரன் உதயசங்கர் (அ.சரோன்அபினா – தரம் -05, அ.அக்சனா – தரம் 03) அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். மற்றும் தரம் -03 ஆண்களுக்கான பிரிவினை செயற்பட்டு மகிழ்வோம் போட்டிக்குத் தயார்ப்படுத்தி, கோட்டமட்டத்தில் 1ம் இடத்தையும் வலயமட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றுக் கொள்வதற்கு பயிற்சியளித்தவரும் சிறுவர் அரங்கிற்கான மாணவர்களுக்குப் பயிற்சியளித்தவருமான எமது பாடசாலையின் ஆசிரியரான திருமதி.ராதை மகிழ்ராஜன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை மாணவர்களுக்கு மதியவேளை உணவினை தயாரிப்பதற்கான விறகினை இலவசமாகத் தந்துதவிய திரு.செ.சதானந்தன்(தரம் 01 ச.சரவணன்) அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் சிறுவர் நாடகத்திற்குத் தேவையான ஆடைகளை இலவசமாகத் தைத்துதவிய திருமதி உ.தர்சினி (உ.அன்புவிழி தரம் 05) அவர்களுக்கும் மற்றும் சிறுவர் அரங்கிற்கான

செயற்கை மரங்களை வடிவமைத்துத்தந்த திரு.க.பராக்கிரமன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோட்டமட்ட வலயமட்ட மாவட்டமட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான வெற்றிக்கேடயங்களை அன்பளிப்புச் செய்தவர்கள் வரிசையில்

1. ஆங்கில அபிநயப்பாடல் தரம் 01,02 – 22 மாணவர்கள் - சி.மதியழகன் (ம.ஹர்சினி – தரம் 01)
2. ஆங்கில அபிநயப்பாடல் தரம் 03,04,05 – 25 மாணவர்கள் -செ.சதாகரன் (ச.பிரணவி – தரம் 02)
3. செயற்பட்டு மகிழ்வோம் தரம் 03 – 12 மாணவர்கள் -திருமதி. ராதை மகிழ்ராஜன் (தரம் 03 ஆசிரியர்)
4. சிறுவர் அரங்கு தரம் 05 – 20 மாணவர்கள் - திரு.சி.சச்சிதானந்தன் (ச.ஆராதனா தரம் 02)
5. ELRTC - Distinction(90%-100%) தரம் 01,02– 13 மாணவர்கள், ELRTC கற்பித்த ஆசிரியருக்கான பரிசு - திரு.ஆ.உதயசீலன் (உ.குபர்னிஹா – தரம் 02)

இப்பரிசில்களை தந்துதவிய எமது பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பரிசளிப்பு விழாவுக்கான சிற்றுண்டிச் செலவிற்கு 1000/= வினை அன்பளிப்பு செய்தவர்களாக

| தரம் - 01 | தரம் - 02 |
|---|---|
| 1. வி.சதீஸ்குமார் | 1. உ.குபர்னிஹா |
| 2. ஸ்ரீ.அஸ்வின், ஸ்ரீ.அட்சயன் | 2. ச.ஆராதனா |
| 3. சு.சம்யுதா | 3. ச.பிரணவி |
| 4. ஜெ.அபிஷன் | 4. ம.அபிஷயா |
| 5. ச.சரவணன் | 5. மோ.ஹேரசிகா |
| 6. அ.அர்ஷான் | |
| 7. ஜீ.பிரியா (500/=) | |

எமது பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேடை அலங்காரிப்புக்கான திரைச்சீலை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான 5கோட், 5தொப்பி, 100புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கான 23 வெற்றிக்கேடயம், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 31 மாணவர்களுக்கான வாழ்த்துமடல்களையும் சான்றிதழ்களையும் பரிசளிப்பு விழாவிற்கான பத்திரிகை விளம்பரம் ஆகியவற்றிற்கான நிதியுதவியினை தந்துதவிய தரம் 05 மாணவர்களின் பெற்றோர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 23 மாணவர்களுக்கான வெற்றிப்பதக்கங்கங்களை தந்துதவிய க.பராக்கிரமன்(பராக்கோ மோட்டர்ஸ் நெல்லியடி) அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலையின் வகுப்பறைத் தேவைகள் குறித்து உதவி கோரிய போது கௌரவ திருமதி விஜயகலா மகேஸ்வரன் (பாராளுமன்ற உறுப்பினர் - சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர்) அவர்கள் தங்களின் பாடசாலை அபிவிருத்தி விசேட வேலைத்திட்டம் - 2017 ஊடாக எமது பாடசாலைக்கு 30,00,000/= நிதியினை ஒதுக்கியுள்ளார்கள். எனவே பாடசாலை சார்பாக அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## 1. மாணவர் விபரம்

| தரம் | ஆண் | பெண் | மொத் |
|---|---|---|---|
| 1 | 19 | 16 | 35 |
| 2 | 15 | 19 | 34 |
| 3 | 17 | 14 | 31 |
| 4 | 11 | 13 | 24 |
| 5 | 11 | 23 | 34 |
| | 73 | 85 | 158 |

## 2. ஆசிரியர் ஆளணி விபரம்

அதிபர் :- திரு.கந்தசாமி ரவீந்திரன்
(B.ED,Primary Trained, SLPS III)

ஆசிரியர்கள்

1. திருமதி.யாழினி மதியழகன்
   (NCOE Dip Holders, SLTS-2-II)
2. திருமதி. மாலாவதி செல்வானந்தன்
   (Primary Trained, SLTS 2-II)
3. திரு.பொன்னுத்தம்பி கேதீஸ்வரன்
   (B.A(Econ)Hons.Dip-in-Education SLTS-2-I)
4. திருமதி.சுமதி குகதாசன்
   (B.A.Dip.in.Edu,SLTS 2-I)
5. திருமதி.மேகலா பராக்கிரமன்
   (B.A.Dip.in.Edu,SLTS 2-II )
6. திருமதி.ராதை மகிழ்ராஜன்
   (B.A.PGD Edu,SLTS 2-I)
7. திருமதி.தவதாரணி ஜெயகணேஷ்
   (NCOE Dip Holders, SLTS-2-II)

தொண்டர் ஆசிரியர்கள்

1. செல்வி.வில்வராசா ஆன்கனிஸ்ரா
   (றோ.கத்தோலிக்கம்)
2. செல்வி. தங்கவேலாயுதம் தர்ஷகா
   (கணினி)

**ELRTC ENGLISH**

1. திருமதி.சுஜந்தன் ஜெயந்தா

# இணைப்பாடவிதான செயற்பாடுகள்

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்காக நடாத்தப்பட்டு வருகின்ற சகல போட்டி நிகழ்வுகளிலும் எமது மாணவர்களும் பங்கு பற்றியுள்ளனர் இடங்களையும் பெற்றுள்ளனர். நிகழ்வுகளில் பெற்ற இடங்கள் வருமாறு.

## கோட்ட, வலய, மாகாண மட்டப் போட்டிகள்

| இல | போட்டி | | நிகழ்ச்சி | மாணவர் பெயர் | பெற்ற இடம் |
|---|---|---|---|---|---|
| 1. | கோட்ட மட்டம் | ஆங்கிலதினப் போட்டி | வாசிப்பு | த.அபிஷா | 3ம் இடம் |
| 2. | கோட்ட மட்டம் | ஆங்கிலதினப் போட்டி | வாசிப்பு | ஜெ.ஜெக்சிகா | 3ம் இடம் |
| 3. | வலய மட்டம் | ஆங்கிலதினப் போட்டி | Action Song(1,2) | குழு | 1ம் இடம் |
| | மாகாண மட்டம் | | | | 4ம் இடம் |
| 4. | வலய மட்டம் | ஆங்கிலதினப் போட்டி | Action Song(3,4,5) | குழு | 1ம் இடம் |
| | மாகாண மட்டம் | | | | 5ம் இடம் |
| 5. | கோட்ட மட்டம் | செயற்பட்டு மகிழ்வோம் | விளையாட்டு | குழு | 1ம் இடம் |
| | வலய மட்டம் | | | | 3ம் இடம் |
| 6. | கோட்ட மட்டம் | சிறுவர் அரங்கு | நாடகம் | குழு | 3ம் இடம் |

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை – 2017

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு இவ்வாண்டில் எமது பாடசாலையில் இருந்து 35 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.இவர்களில் ஐந்து மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேலாகப் பெற்றுள்ளனர்.(சித்தி வீதம்14.3%) 100புள்ளிகளுக்கு மேல் 24 மாணவர்கள் பெற்றுள்ளனர் (68.6%)இவ்வாண்டு மாகாணக்கல்வித் திணைக்களம் சகல மாணவர்களையும் 70புள்ளிக்கு மேல் பெறச் செய்தல் வேண்டும் என்ற இலக்கைக் கொண்டிருந்தது. அதற்கமைய செயற்பட்ட நாம் 35 மாணவர்களில் 31 மாணவர்களை 70 புள்ளிகளுக்கு மேல் பெறச் செய்துள்ளோம். (தேர்ச்சி வீதம்88.6%)மேலும் இம்முறை இப்பாடசாலையின் அதிகூடிய புள்ளி என்ற வகையில் 167 புள்ளியாகக் காணப்படுகின்றது. இப்பரீட்சையில் தோற்றி வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஐந்து மாணவர்களையும் 70 புள்ளிக்கு மேல் பெற்ற 31 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோருக்கும் வழிகாட்டிய வகுப்பாசிரியர் திருமதி. மேகலா பராக்கிரமன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## கடந்த 5 ஆண்டுகளில் புலமை பரிசில்

## பரீட்சைப் பெறுபேறுகள்2017 புலமைப்பரிசில் பரீட்சையில்

| ஆண்டு | வெட்டுப் புள்ளி | தோற்றியோர் தொகை | சித்தி பெற்ற தொகை | சித்தி வீதம் | 70புள் மேல் பெற்ற தொகை | வீதம் | எமது பாடசாலையில் அதிகூடிய புள்ளிகள் | எமது பாடசாலையில் அதிகுறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2013 | 154 | 18 | 03 | 16.7% | 15 | 83.3% | 159 | 061 |
| 2014 | 150 | 20 | 02 | 10% | 18 | 90% | 164 | 037 |
| 2015 | 153 | 24 | 06 | 25% | 21 | 87.5% | 174 | 061 |
| 2016 | 152 | 24 | 02 | 8.3% | 22 | 91.6% | 175 | 052 |
| 2017 | 155 | 35 | 05 | 14.3% | 31 | 88.6% | 167 | 051 |

# சித்தி பெற்ற மாணவர்கள்

| தோற்றியோர் | சித்தி பெற்ற தொகை | மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|
| 35 | 05 | கு.கோகுலன் | 167 |
| | | கி.கம்ஷா | 166 |
| | | உ.அன்புவிழி | 159 |
| | | மு.ஹயானி | 156 |
| | | அ.தீபராஜ் | 155 |

புலமைப் பரீசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம் -24

| | |
|---|---|
| பி.ஆருஜா - 153 | இ.இந்துமதி – 130 |
| அ.ஷரோன்அபினா – 150 | சி.தனுசியா - 128 |
| ரூ.ஜெறிஸ் - 148 | சி.கிருஜனா - 127 |
| க. டிருசாந்தன் - 146 | கி.கலைக்குமரன் - 127 |
| த.அபிஷா – 144 | இ.ஸ்ரீராம் - 124 |
| வி.சதுர்ஜனா - 142 | யோ.ஆர்த்திகா – 122 |
| சு.நிருஜன் - 137 | ஸ்ரீ.கலைஎழில் - 119 |
| ர.அபிநயா – 135 | யா.தயாளன் - 112 |
| எ.மேரிதிபானி – 132 | ரா.தேன்விழியன் - 101 |
| ஞா.ஞானகவி – 130 | |

# பரிசில் பெறும் மாணவர் விபரம் - 2016

| இல | தரம் | மாணவர் பெயர் | பாடங்களும் நிலைகளும் |
|---|---|---|---|
| 1. | 01 | கி.கமிஷா | சைவநெறி தமிழ் 1ம் இடம் கணிதம் சுற்றாடல் 2ம் இடம் |
| 2. | 01 | உ.குபர்ணிஹா | சைவநெறி 1ம் இடம் தமிழ் கணிதம் 2ம் இடம் |
| 3. | 01 | ட.டனுஸ்ரிகா | கத்தோலிக்கம் 1ம் இடம் தமிழ் கணிதம் 2ம் இடம் |
| 4 | 01 | பெ.யோனிஷா | கணிதம் 1ம் இடம் .தமிழ் 2ம் இடம் |
| 5 | 01 | மோ.ஹேசிகா | சுற்றாடல் தமிழ் 2ம் இடம். |
| 6 | 01 | ச.ஆராதனா | கணிதம் 1ம் இடம் |
| 7 | 01 | ச.பிரணவி | சுற்றாடல் சைவநெறி 1ம் இடம் |
| 8 | 01 | அ.அபிஷன் | கத்தோலிக்கம் 1ம் இடம் |
| 9 | 01 | து.தருண் | கத்தோலிக்கம் 1ம் இடம் |
| 10 | 01 | பி.ஜனுசன் | கத்தோலிக்கம் 1ம் இடம் |
| 11 | 01 | றோ.டிலக்சி | கத்தோலிக்கம் 1ம் இடம் |
| 12 | 01 | இ.டென்சிகா | கத்தோலிக்கம் 1ம் இடம் |
| 13 | 02 | ரா.சுலோஜன் | தமிழ் கணிதம் சைவநெறி 1ம் இடம் |
| 14 | 02 | ச.அபிநயன் | தமிழ் 2ம் இடம் சுற்றாடல் சைவநெறி 3ம் இடம் |
| 15 | 02 | சு.கோபிதரன் | சைவநெறி 2ம் இடம் தமிழ் 3ம் இடம் |
| 16 | 02 | ரா.ரதுமினா | கணிதம் சுற்றாடல் 2ம் இடம் |
| 17 | 02 | ச.தேவானந் | கணிதம் 3ம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| 18 | 02 | அ.அபிஷன் | சுற்றாடல் 1ம் இடம் |
| 19 | 02 | கு.ஜெனிலியா | கத்தோலிக்கம் 1ம் இடம் |
| 20 | 02 | அ.அஜய் | கத்தோலிக்கம் 2ம் இடம் |
| 21 | 02 | இ.ஜதுஷன் | கத்தோலிக்கம் 3ம் இடம் |
| 22 | 02 | அ.அக்ஷனா | கிறிஸ்தவம் 1ம் இடம் |
| 23 | 03 | ஜெ.ஜெஸ்சிகா | தமிழ் கணிதம் கத்தோலிக்கம் சுற்றாடல் 1ம் இடம் ஆங்கிலம் 2ம் இ |
| 24 | 03 | ப.தீபிகா | தமிழ் 2ம் இடம் ஆங்கிலம் 3ம் இடம் |
| 25 | 03 | செ.கார்த்திகன் | சைவநெறி 2ம் இடம் தமிழ் கணிதம் 3ம் இடம் |
| 26 | 03 | றெ.றெஜீவன் | கணிதம் சுற்றாடல் 2ம் இடம் கத்தோலிக்கம் 3ம் இடம் |
| 27 | 03 | சி.ஹரிஸ்ராம் | சைவநெறி 1ம் இடம் கணிதம் சுற்றாடல் 3ம் இடம் |
| 28 | 03 | சு.சுகிதரன் | கத்தோலிக்கம் 2ம் இடம் சுற்றாடல் 3ம் இடம் |
| 29 | 03 | வி.சிபித் | ஆங்கிலம் 1ம் இடம் |
| 30 | 03 | அ.கெர்னா | கிறிஸ்தவம் 1ம் இடம் |
| 31 | 03 | கோ.கௌரிசனன் | சைவநெறி 3ம் இடம் |
| 32 | 04 | மு.ஹயானி | தமிழ் 1ம் இடம் கணிதம் ஆங்கிலம் 2ம் இடம் |
| 33 | 04 | ஆ.சுரோஸ்அஜினா | தமிழ் கிறிஸ்தவம் 2ம் இடம் |
| 34 | 04 | பி.ஆருஜா | சுற்றாடல் சைவநெறி 1ம் இடம் தமிழ் 3ம் இடம் |
| 35 | 04 | உ.அன்புமிழ் | கணிதம் ஆங்கிலம் 1ம் இடம் சைவநெறி 3ம் இடம் |
| 36 | 04 | கி.சம்ஷா | சுற்றாடல் ஆங்கிலம் 2ம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| 37 | 04 | வி.சதுர்பனா | கற்றாடல் கத்தோலிக்கம் 2ம் இடம் |
| 38 | 04 | ஞா.ஞானவி | கத்தோலிக்கம் 1ம் இடம் |
| 39 | 04 | ரு.ஜெஹர்ஸ் | கத்தோலிக்கம் 3ம் இடம் |
| 40 | 04 | சி.தனுசியா | சித்திரம் 1ம் இடம் |
| 41 | 04 | நா.டெசியா | சித்திரம் 3ம் இடம் |
| 42 | 04 | ர.அபிநயா | சைவநெறி 1ம் இடம் |
| 43 | 04 | எ.மேரிநிமாளி | கணிதம் 3ம் இடம் |
| 44 | 05 | ம.இனியா | தமிழ் சுற்றாடல் சைவநெறி ஆங்கிலம் கணிதம் 1ம் இடம் |
| 45 | 05 | ம.அரணி | தமிழ் சைவநெறி 2ம் இடம் |
| 46 | 05 | அ.விஜூஜா | கத்தோலிக்கம் 1ம் இடம் கணிதம் சுற்றாடல் ஆங்கிலம் 2ம் இடம் தமிழ் 3ம் இடம் |
| 47 | 05 | செ.நிலானி | கணிதம் சைவநெறி ஆங்கிலம் 3ம் இடம் |
| 48 | 05 | ம.இலக்கியா | சுற்றாடல் 3ம் இடம் |
| 49 | 05 | அ.ஜெனஸ்ரின் | கத்தோலிக்கம் 2ம் இடம் |
| 50 | 05 | வி.விதுர்ஷன் | கத்தோலிக்கம் 3ம் இடம் |